1972 ஆகஸ்ட் 22]

Post-Graduate courses of Medicine and Surgery

* 182. *Q.*—THIRU G. SWAMINATHAN : Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(*a*) the number of candidates who were admitted in Post-Graduate courses of medicine and surgery every year during the last five years in our State; and

(*b*) the number of candidates belonging to Scheduled Caste among them?

மருத்துவம், அறுவை மருத்துவம் ஆகிய பட்டமேற்படிப்புப் பிரிவுகள்

திரு. ஜி. சுவாமிநாதன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) நமது மாநிலத்தில் கடந்த ஐந்தாண்டுகளில் மருத்துவம், அறுவை மருத்துவம் ஆகிய பட்ட மேற்படிப்புப் பிரிவுகளில் சேர்த்துக்கொள்ளப்பட்ட மாணவர்கள் எத்தனை பேர்?

(இ) அவர்களில் அரிசன வகுப்பைச் சேர்ந்தவர்கள் எத்தனை பேர்?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் :

ஆண்டு.	பொது மருத்துவம்		பொது அறுவை	
	சேர்த்துக் கொள்ளப் பட்டவர்கள்.	தாழ்த்தப் பட்ட வகுப் பினர்.	சேர்த்துக் கொள்ளப் பட்டவர்கள்.	தாழ்த்தப் பட்ட வகுப் பினர்.
1967	48	..	50	1
1968	50	1	53	1
1969	57	1	57	2
1970	47	2	51	2
1971	48	2	51	3
1972	53	3	52	2
மொத்தம் ..	303	9	314	11

திரு. ஜி. சுவமிநாதன் : தலைவரவர்களே, இந்த மாணவர்களில் தாழ்த்த தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த மாணவர்கள் குறைவாக இருப்பதற்குக் காரணம் என்ன என்பதை அரசு அறியுமா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, இந்த மேற்படிப் பிற்கான விதிமுறைகளில் பிற்படுத்தப்பட்டோர், முற்போக்கு இனத்தைச் சேர்ந்த மாணவர் என்ற பாகுபாடு ஏதும் கிடையாது. என்ருலும், தகுதி யுடைய மாணவர்கள்—தாழ்த்தப்பட்டவர்கள் யார் வந்தாலும் அவர்களுக்கு வாய்ப்பு அளிக்கப்படுகிறது. பொதுவாகவே, தாழ்த்தப்பட்டவர்களில் இத் தகுதிகள் உள்ளவர்கள் குறைவு. அப்படி தகுதி உடையவர்கள் குறைவாக இருக்கிற காரணத்தால், இந்த எண்ணிக்கையும் குறைவாக இருக்கிறதே தவிர, வேறு காரணம் ஏதுமில்லை.

திரு. ஜி. சுவாமிநாதன் : தலைவரவர்களே, மேல் படிப்புக்கு ஸ்டைஃபண்ட் கொடுப்பதில்லை. தாழ்த்தப்பட்ட மாணவர்கள் பொருளாதாரத்திலும் தாழ்ந்த நிலையில் இருப்பதால், அவ்வளவு பணம் செலவு செய்ய முடியாத நிலையில் இருக்கிற காரணத்தால், அந்த மாணவர்களுக்கு ரூ. 250 ஸ்டைஃபண்ட் கொடுக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : அந்த விவரம் என்னிடத்தில் இல்லை. எனினும், தாழ்த்தப்பட்ட மாணவர்கள் உதவித் தொகை பெற்ருல் தான் படிக்க முடியும் என்று அரசுக்குத் தெரிவிக்கப்பட்டால், அது தனியாகப் பரிசீலனை செய்யப்படும்.

திரு. எல். பலராமன் : தலைவரவர்களே, இந்தப் படிப்பிற்கு தாழ்த்தப்பட்ட மாணவர்களுக்கு இத்தனை சத விகிதம் என்று ஒதுக்கப்பட்டிருக்கிறதா ? அப்படியானுல் எந்த அளவுக்கு ஒதுக்கப்பட்டுள்ளது ? ஒதுக்கப்பட்டிருந்தால், எந்தச் சட்டத்திற்கேற்ப இடம் ஒதுக்கப்பட்டது என்று அமைச்சர் கூறுவார் களா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, அந்த முறை, பட்டப் படிப்பு எம்.பி., பி.எஸ். போன்ற படிப்புக்களுக்கு இருக்கின்றன. ஆனுல், இந்தப் பட்ட மேல் படிப்பிற்கு, அவர்களுடைய தகுதி, திறன், ஆராய்ச்சியில் ஈடுபடக்கூடிய திறமை, ஆர்வம் ஆகியவற்றின் அடிப்படையில் தான் சேர்க்கப் படுகிருர்கள். இதிலே எந்தவிதமான பாகுபாடும் கிடையாது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS